
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1093

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

48

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# பொருளாதார மேம்பாட்டில் சத்தமில்லாத சாதனை!

இந்தியாவில் இஸ்லாமியர்கள் சிறுபான்மைச் சமூகம் என்றால் அதில் பெண்கள், ‘இரட்டைச் சிறுபான்மை’ என்ற நிலையில் உள்ளதாகவே கொள்ள வேண்டும். ஏனெனில், கடைசியாக எடுக்கப்பட்ட 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, முஸ்லிம் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 51.9 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. இது தேசிய சராசரியான 65.46 சதவிகிதத்தைவிட குறைவு. அதற்காக, முஸ்லிம்கள் பெண் பிள்ளைகளைப் படிக்கவே அனுப்புவதில்லை என்று அர்த்தமில்லை. முஸ்லிம் குடும்பங்கள் பெண் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை என்ற பொதுவான கருத்து தவறானது என்று ‘குண்டு கமிட்டி’ (2014) தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. வறுமை மற்றும் அருகாமையில் பள்ளிகள் இல்லாததுதான் இடைநிற்றலுக்கு முக்கிய காரணங்களே தவிர, மதம் காரணம் அல்ல என்று அந்த அறிக்கை மிகத் தெளிவாகக் கூறியது.

பள்ளிப்படிப்பை முடித்தாலும், கல்லூரி மற்றும் உயர் கல்விக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதில் இருந்தே இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. உயர் கல்வி முடிக்காததால்தான் இந்தியாவிலேயே மிகக் குறைவான வேலை வாய்ப்பு பங்கேற்பு விகிதம் கொண்டவர்களாக முஸ்லிம் பெண்கள் உள்ளனர். 2023-24-ஆம் ஆண்டு கணக்குப்படி, இந்தியாவில் முஸ்லிம் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 21.4 சதவிகிதமாக உள்ளது. “பெரும்பாலான பெண்கள் கணவர் அல்லது குடும்பத் தலைவரைச் சார்ந்தே இருப்பதால், இவர்களிடம் தனிப்பட்ட வங்கிச் சேமிப்போ அல்லது சொத்துகளோ இருப்பது அரிதாக உள்ளது. வங்கிகள் மற்றும் முறையான நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதில் முஸ்லிம் பெண்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்” என்று ‘சச்சார் கமிட்டி’யும் குறிப்பிடுகிறது.

ஆனால் தமிழ்நாட்டிலோ, மாநில சராசரிக்கு நிகராக முஸ்லிம் பெண்கள் எழுத்தறிவு பெற்றுள்ளனர். குறிப்பாக, பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் 3.5 சதவிகித உள் இடஒதுக்கீடு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முஸ்லிம் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுவாக உறுதிப்படுத்தியுள்ளது. மருத்துவம், பொறியியல் மற்றும் கலைக்கல்லூரிகளில் முஸ்லிம் மாணவர்களில் பெண்களும் கணிசமான எண்ணிக்கையில் தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். அதேவேளையில், வறுமையின் காரணமாகக் கடந்த தலைமுறைகளில் உயர் கல்வி வாய்ப்பைத் தவற விட்டோருக்கும் எண்ணற்ற திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் தந்திருக்கிறார்.

அதில் ஒரு தனித்துவமான திட்டம்தான் ‘முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்’. ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி, அவர்களுக்கு உதவும்பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால் ‘முகம்மதியன் கோஷா விதவை சாரிட்டி’ என்ற பெயரில் 01.10.1892-இல் ஒரு சங்கம் தொடங்கப்பட்டது. அக்காலத்தில் முஸ்லிம் பெண்கள் பெரும்பாலும் கோஷா (GOSHA) எனப்படும் பர்தா முறை அல்லது வீட்டில் தனித்திருக்கும் முறையை மிகக் கடுமையாகப் பின்பற்றிவந்தனர். கணவரை இழந்த அல்லது ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட இந்தப்பெண்கள், வெளியே வந்து வேலை தேடுவதோ அல்லது உதவி கேட்பதோ மிகவும் கடினமானதாக இருந்தது. அவர்களுக்கு உதவுவதற்காகவே இத்திட்டம் அப்போது உருவாக்கப்பட்டது.

கிட்டத்தட்ட அதேபோன்ற திட்டம்தான், முத்தமிழறிஞர் கலைஞர் 2007-இல் உருவாக்கிய

### மனிதநேயத்தின் அடையாளம்

இத்திட்டத்தை உருவாக்கும்போது, ‘ஆதரவற்ற முஸ்லிம் பெண்களுக்குக் கைகொடுப்பது மதச்சார்பின்மை மட்டுமல்ல, அது மனிதநேயத்தின் அடையாளம்’ என்றுகூறி முத்தமிழறிஞர் கலைஞர் இதனை தமிழ்நாடெங்கும் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தினார். ‘அரசு வெறும் பார்வையாளராக இருக்காது; பங்கேற்பாளராக இருக்கும்’ என்பதைத் தெளிவுபடுத்தி, இத்திட்டத்திற்கு வெளியில் இருந்து திரட்டப்படும் நிதிக்கு இணையாக அரசும் தன் பங்கை வழங்கும் என்பதை அப்போதே



‘முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்’ திட்டமும். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் முஸ்லிம் பெண்களில் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திருமணமே ஆகாத முஸ்லிம் பெண்களுக்கு வாழ்வாதார துணையாக, கலைஞர் உருவாக்கியதே இத்திட்டம். கல்வி, மருத்துவம் மற்றும் சிறுதொழில் தொடங்க நிதியுதவி அளிப்பது இச்சங்கத்தின் பணியாகும். தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் (டாம்கோ) நிர்வாக இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப்படுகின்றது.

### சங்கத்தின் நோக்கங்கள்

ஆதரவற்ற, ஏழை, வயதான முஸ்லிம் பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்குதல் மற்றும் தேவையான பிற உதவிகள் வழங்குதல் மற்றும் விதவைப் பெண்களின் மறு திருமணத்திற்கு நிதியுதவி செய்தல்.

ஆதரவற்ற, ஏழைப் பெண்களுக்கு வியாபாரம், தொழில், கைவினைப் பொருட்கள் செய்ய பயிற்சி அளித்தல் மற்றும் வியாபாரம் தொடங்க (அல்லது) தொழில் செய்ய நிதி உதவி அளித்தல். ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் சலுகைகள் இவர்களுக்குக் கிடைக்க உதவி செய்தல். முஸ்லிம் மகளிர் மற்றும் குழந்தைகள் கல்வி பயில உதவித்தொகை வழங்குதல் மற்றும் அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான பிற உதவிகள் செய்தல்.

முஸ்லிம் பெண்கள் சுய உதவிக்குழுக்கள் ஏற்படுத்தி, தேவையான பயிற்சிகள் அளித்தல் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பல தரப்பட்ட கடனுதவிகளைப் பெற்றுத்தந்து தொழில், வியாபாரம் தொடங்க உதவுதல் இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களாக உள்ளன.

> “தற்போதைய அரசு, அந்த உச்சவரம்பை 20 லட்சம் ரூபாய் வரை உயர்த்தியுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப்படியான பெண்களுக்கு உதவிகள் சென்றடைவது உறுதிசெய்யப்படுகிறது”

உறுதிசெய்தார் கலைஞர். தற்போது, திராவிட மாடல் அரசு இந்த முஸ்லிம் மகளிர் உதவும் சங்கத்தைப் புதிய பரிமாணத்திற்கு எடுத்துச்சென்றுவிட்டது என்றே சொல்லலாம். இச்சங்கத்தின் மூலம் உதவி பெற்ற முஸ்லிம் பெண்கள் பற்றி, கடந்த ஐந்து ஆண்டுகளில் பல நூற்றுக்கணக்கான செய்திகள் பத்திரிகைகளில் வந்துவிட்டன. அந்த அளவுக்கு இத்திட்டத்தை மிக வீரியமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது, திராவிட மாடல் அரசு.

குறிப்பாக, முன்பே கூறியதைப் போல கலைஞர் காலத்தில், மாவட்டச் சங்கம் பொதுமக்களிடம் வசூலிக்கும் நன்கொடைக்குச் சமமான தொகையை (1:1 என்ற விகிதத்தில்) அரசு மானியமாக வழங்கி வந்தது. ஆனால் தற்போது, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு, இந்த விகிதத்தை 1:2 ஆக உயர்த்தியுள்ளது. அதாவது, ஒரு மாவட்டச் சங்கம் பொது மக்களிடம் 10 லட்சம் ரூபாய் நன்கொடை திரட்டினால், தமிழ்நாடு அரசு தனது பங்காக 20 லட்சம் ரூபாய் வழங்கும். ஆக மொத்தம் 30 லட்சம் ரூபாய் அந்த சங்கத்திற்குக் கிடைக்கும். முன்பு இந்த இணை மானியம் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட உச்சவரம்பு சுமார் ரூ.10 லட்சம் வரை இருந்தது. தற்போதைய அரசு, அந்த உச்சவரம்பை 20 லட்சம் ரூபாய் வரை உயர்த்தியுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகப்படியான பெண்களுக்கு உதவிகள் சென்றடைவது உறுதிசெய்யப்படுகிறது. அதேபோல தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களிலும் உடனடியாக முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றுக்கான தொடக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

முன்பு விதவை உதவித்தொகை மற்றும் தையல் இயந்திரம் வழங்குவது மட்டுமே பிரதானமாக இருந்தது. தற்போது, மாணவிகளுக்கான கல்வி உதவித்தொகைக்கும், சுயதொழில் தொடங்குவதற்கான நிதியுதவிக்கும் முன்னுரிமை தரப்படுகிறது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சத்தமில்லாமல் சென்னையில் மட்டும் செயல்பட்ட ஒரு சங்கத்தை கலைஞர் தமிழ்நாடெங்கும் விரிவுபடுத்தினார். அது இன்றைய கழகத் தலைவர் ஆட்சியில் நிதி வலிமை பெற்று, நன்கு வேரூன்றி, கிளைகள் பரப்பி, செழித்து வளர்ந்திருக்கிறது.

...நீளும்



### ‘ட்ரபுள் ஆட்சி – டப்பா இன்ஜின் ஆட்சி’

‘தமிழ்நாட்டில் டபுள் இன்ஜின் சர்க்கார் அமைப்போம்’ என கட்டாயக் கூட்டணிக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடிக்குத் தகுந்த பதிலடியாக, ‘அது டபுள் இன்ஜின் சர்க்கார் இல்லை, ட்ரபுள் இன்ஜின் சர்க்கார், டப்பா இன்ஜின் சர்க்கார்’ எனத் தகுந்த பதிலடி கொடுத்தார், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள். உண்மையில், பாரதிய ஜனதா கட்சி நீண்டகாலமாக ஆண்டு கொண்டிருக்கும் மாநிலங்களின் வளர்ச்சியைவிட, கடந்த ஐந்தாண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியின் வளர்ச்சியினை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே சாட்சியாகச் சொல்கின்றன. அதே நேரத்தில், பா.ஜ.க. ஆளும் குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களின் வளர்ச்சி விகிதம் இந்தியாவின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விடவும் கீழேதான் உள்ளன.

இந்த நிலையில், பா.ஜ.க. ஆட்சி ’ட்ரபுள் இன்ஜின் சர்க்கார்’ என்பதற்கு ஏற்ப, மத்தியப்பிரதேச மாநிலத்தில் ஒரு பள்ளியில் குடியரசு தினம் அன்று மாணவர்களுக்குக் காகிதத்தில் மதிய உணவு வழங்கிய காட்சிகள் இணையத்தில் பரவிவருகின்றன. குறிப்பேடுகள், புத்தகங்களில் இருந்து கிழிக்கப்பட்ட பேப்பர்களில் உணவு பரிமாறப்பட்டுள்ளது. இதுபோல ஆரோக்கியமற்ற முறையில் ஏற்கெனவே ஒரு பள்ளியில் உணவு வழங்கப்பட்டு, விமர்சனங்கள் எழுந்த நிலையில், மீண்டும் அதுபோன்ற சம்பவம் அரங்கேறி உள்ளது. இதுதான் ‘டபுள் இன்ஜின்’ ஆட்சியின் சாட்சி என விமர்சனம் செய்துவருகின்றனர் விமர்சகர்கள். இதுதான் பா.ஜ.க.வின் டப்பா இன்ஜின்’ மாடல்.

## ஃப்ளாஷ்பேக்



### தமிழின மீட்சிக்குக் கழகமே வழி!



ஜெ.ஜவஹர்

2016-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் நம் தானைத் தலைவர் அவர்களைச் சந்தித்து, வாழ்த்து பெற்று, தேர்தல் நிதியளித்தபோது எடுத்த படம் இது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர், மாவட்டத் துணைச் செயலாளர் என 30 ஆண்டுகளாகக் கழகப் பொறுப்புகளில் இருந்து, எண்ணற்ற முறை தலைவரை சந்தித்திருந்தாலும், இந்தப் படத்தை என் வாழ்நாள் வாய்ப்பாகப் பாதுகாத்துவருகிறேன். என்றென்றும் கழகத்தில் பயணிப்பதுதான் தமிழினத்தின் மீட்சிக்கு வழி! அந்த உணர்வே என்னை இயக்கிக்கொண்டிருக்கிறது.

**– ஜெ.ஜவஹர், தலைமைக் கழகப் பேச்சாளர், மதுரை மாநகர் மாவட்டக் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கழகம்

### தி.மு.க. பொது மாநாடு!

1966-ஆம் ஆண்டு, கழகத்தின் 4-வது பொது மாநாடு டிசம்பர் 29 முதல் ஜனவரி 1-ஆம் தேதி வரை நான்கு நாட்கள் சென்னை விருகம்பாக்கம் நீலமேகம் நகரில் போளூரார் அரங்கில் நடைபெற்றது. ’செந்தமிழா வா! சென்னை மாநகர் நோக்கி!’ என்று அன்பழைப்பு விடுத்தார், பேரறிஞர் அண்ணா. இந்தப் பொது மாநாட்டினைக் கழகத்தினர் தங்களின் குடும்பப் பெருவிழாவாகக் கருதி, சென்னை மாநகர் நோக்கி திரள் திரளாக வந்து குவிந்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.